# கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் தொடர்பாடல்
## Communications from a Christian Perspective

# CCS Children's Ministry Track
**Colombo Theological Seminary – Kohuwela**

Period: 10th March – 4th April 2025 Lecturer: Rev. Gamini. J

---

**CCS – Children Ministry Track.**
**புள்ளிகள்: 2**
**நாள்: திங்கள் 13.00 – 16.00, வெள்ளி 9.30 – 12.30**
**காலம்: 8 வாரங்கள்**(*10th, 14th, 17th, 21st, 24th, 28th & 31st March, 4th April 2025*)

**குறிக்கோள்(*Objective*):**

இன்று செய்திப் பரிமாற்றமானது, ஒரு உயர்ந்த நிலையில் காணப்படுகின்றது. ஆகவே தகவல் பரிமாற்றம் அத்தியாவசியமான மதிநுட்பம் உள்ளதாக இருக்கின்றது. தம்மை வார்த்தையினூடாக வெளிப்படுத்திய தேவனை ஆராதிக்கும் நாம் செய்திப் பரிமாற்றத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். மனிதர் மத்தியில் உருவாகும் பிரச்சனைகளுக்குக் காரணம் தகவல் பரிமாற்றத்தில் தேர்ச்சியின்மையேயாகும். இப்பாடநெறி தகவல் பரிமாற்ற வழிகளை ஆராய்ந்து, உங்கள் தகவல் பரிமாறும் தன்மைகளைக் கிறிஸ்தவ ஊழியங்களிலும், தனிப்பட்ட உறவு முறைகளிலும், தொழில்த் துறைகளிலும் மேம்படுத்தும் என்பது திண்ணம்.

**பாடத்தின் நோக்கங்கள்(*Class Purpose/rationale*):**

- இப்பாடநெறியில் கிறிஸ்தவப் வாழ்வில், பணியில், தலைமைத்துவத்தில் எவ்வாறு பிறருடன் தொடர் பாடலை ஏற்படுத்த வேண்டும் என்பதை ஆராய்தல்.
- இதில் விளங்கிக் கொள்ள வேண்டிய அடிப்படைக் கொள்கைகளையும், அறநெறிகளையும் ஆராய்தல்.
- இதின் இறையியற்தன்மைகளையும், நடைமுறைத் தன்மைகளையும் ஆராய்ந்து பார்த்து. இப் பாடத்தைப் புரிந்துகொள்வதற்கும், விளங்குவதற்குமான தொழிற்நுட்ப திறன்களை வளர்த்துக்கொள்ளுதல்.
- எதிர்கால கிறிஸ்தவ உலகில் மேன்மையான, தேவனுக்கு மகிமையான தொடர்பாடுகளை மேற்கொள்ளும் யுத்திகளை கையாளக் கற்றுக்கொள்ளல்.
- கிறிஸ்தவத் தொடர்பாடலிலுள்ள பல நடைமுறை வழிமுறைகளை உள்வாங்கல்
- இவைகளின் மூலம் வினைத்திறனுள்ள கிறிஸ்தவ தொடர்பாடல்களைக் கட்டியெழுப்பல்.

**கற்றல் முறைகள்: அறி, இரு, செய்(*Learning Objectives* – *Know, Be, Do*)**
**அறி(*Know*):**

- இப்பாடத்தை ஆழமாகப் புரிந்துகொண்டு பேச்சு, எழுத்துத் திறன்களை மேம்படுத்தல்.
- வினைத்திறனுள்ளவகையில் வேதாகமம் கூறும் தொடர்பாடலை அடைய தகுந்த கருவிகளை உபயோகித்தல்.

**இரு(*Be*):**

- கிறிஸ்தவ வாழ்க்கைக்கும், ஊழியத்திற்கும் பொருத்தமான இரட்சிப்பு, மற்றும் புனிதத்தன்மை போன்றவற்றை பிறருக்கு வழங்கக் கூடிய தொடர்பாடலைக் கட்டியெழுப்புவதன் மூலம், பயனுள்ள வேதாகம செய்திகளைத் தயாரித்து வழங்குதல்.
- மக்களிடையே நம்பிக்கையுடனும், திறமையுடனும் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளும் கிறிஸ்தவ தொடர்பாடல்களை கையாளுதல்.

**செய்(*Do*):**

- எங்குவேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் தேவனுக்கும், சபைக்கும் சேவை செய்ய கிறிஸ்தவ கண்ணோட்டத்திலான தொடர்பாடலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- தேவனுக்கும், சபைக்கும், அதன் மக்களுக்கும் விசுவாசமாக இருக்கும் வகையான கிறிஸ்தவத் தொடர்பாடல்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- தனிப்பட்ட வாழ்வில், ஊழியத்தில் ஒற்றுமையுடனும், நம்பிக்கையுடனும் இருப்பதற்கான உறுதிப்பாட்டை வளர்க்கும் கிறிஸ்தவத் தொடர்பாடலை மேற்கொள்ளுதல்..
- மக்களைத் தேவ இராஜ்யத்திற்குள் அழைத்துச் செல்வதற்கும், சபையாகிய இயேசுவின் சரீரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் உறுதிதரும் கிறிஸ்தவத் தொடர்பாடுகளை கடைப்பிடித்து ஆத்தும அறுவடை, ஊழியங்கள் செய்ய வேண்டும்..

**மையக்கரு (*Central Topics/ key content*)…**

இயேசுவின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவக் கண்ணோட்டத்திலான தொடர்பாடல்களை கையாளுவது எப்படி என கற்றுக்கொள்ளுதல்.

**பிரதான வேதாகமப் பகுதிகள் (*Key Biblical Passages)***

- சங் 19:14, நீதி 10:19,12:18, 18:2,13, எபே 4:29, கொலோ 3:8, யாக் 1:19,

**பாடத்தைப் பூர்த்தி செய்ய(*To Complete this Subject*)…**

| **செயற்பாடுகள்(*Activities*)** | **மணித்தியாலங்கள்(*Hours*)** | **புள்ளிகள்(*Marks*)** | **இறுதிநாள்(*Deadline*)** |
|---|---|---|---|
| பிரதிபலிப்புத் தாள்கள்(*Reflections*) - 05 | 20 | 20% | பாடஇறுதி(*class ends*) |
| வாசிப்பு(*Reading*) | 20 | 25% | 04.05.2025 |
| கட்டுரை(*Essay*) | 30 | 30% | 04.05.2025 |
| இறுதிப்பரீட்சை(*Final Exam*) | 20 | 25% | 04.04.2025 |
| **மொத்தம்(*Total*)** | **90** | **100%** | |

❖ உங்களுடைய ஆக்கங்கள் குறிப்பிட்ட தினத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டும். தவறின் கல்வி நிலைய ஒருங்கிணைப்பாளரின் அனுமதியைப் பெற்று, அபராதக் கட்டணம் செலுத்தப்பட்டு மீண்டும் குறிக்கப்படும் நாளில் கொடுக்கப்பட வேண்டும். ஆனாலும் ஆக்கங்களுக்காக உங்களுக்கு உச்சக்கட்ட தரமாக B-தான் வழங்கப்படும்.

- ❖ உங்கள் வரவு CTS நிறுவனத்தை திருப்பதி செய்வதாக இருத்தல் வேண்டும் அதாவது 80% மான வரவு இருத்தல் வேண்டும்(24 மணிநேர பாடத்தில் 20 மணித்தியாலமும், 36 மணிநேர பாடத்தில் 30 மணித்தியாலங்களும் சமூகமளித்திருத்தல் வேண்டும்). விரிவுரையாளரின் அனுமதியுடன் 75% மான வரவு இருக்கலாம், ஆனால் உயர்ந்த புள்ளியாக B- மாத்திரமே வழங்கப்படும். மேலும் மாணவர்கள் எழுத்து மூல அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வனுமதி வகுப்பறைக்கோப்பில் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- ❖ புலமைச் சொத்தைக் கையாடல் தண்டனைக்குரிய குற்றமாகும்; வேறு ஒருவரின் ஆக்கங்களை மேற்குறிப்புக்களின்றி பயன்படுதுவது பாரதூரமான குற்றமாகக் கருதப்படுகிறது. ஆகவே ஆக்கங்களில் மாணவர்களின் நம்பகத்தன்மை எதிர்பார்க்கப்படுகிறது. CTS நிறுவனத்தின் ஒழுங்கு விதிமுறைகளை தயவுசெய்து பின்பற்றவும்.
- ❖ எல்லா ஆக்கங்களும் இணையத்தள மூடுல்(*Moodle)* இனூடாகவே பரிமாறப்பட வேண்டும்.

- ❖ **வாசிப்பு(*Reading*):**
  - ○ மாக்கிரெட் கலைச் செல்வி லார்பியர் எழுதிய "*தொடர்பு இறையியல் ஓர் அறிமுகம்*" எனும் அற்புதமான புத்தகத்தை வாசித்து அதன் சுருக்கத்தை 500 சொற்களில் எழுதுக.
- ❖ **கட்டுரைகள்:**
  - ○ இன்றைய நவீன காலத்தில் கிறிஸ்தவ விழுமியங்களை மீறிய தொடர்பாடல்களின் பிரயோகத்தையும், அதை எவ்வாறு தீர்க்க முடியும் என்பது பற்றியுமான ஆலோசனைகளையும் கூறுக?

***********மேற்குறிப்பிட்ட தலைப்பில் 750 - 1000 சொற்களுக்குள் விபரணக் கட்டுரை வரைக. கட்டுரைகள் படிப்பு முறைகளுக்கமைய வரையப்படுவது வரவேற்கப்படுகிறது.***********

## பாடத்திட்டம்(*Syllabus*):

- ➢ **அறிமுகம்(*Introduction*)…**
  - ▪ தொடர்பாடல்
  - ▪ கிறிஸ்தவத் தொடர்பாடல்
  - ▪ தொடர்பாடலின் வரலாறு
- ➢ **கிறிஸ்தவத் தொடர்பாடல்(*Communication from a Christian Perspective*)…**
  - ▪ கிறிஸ்தவ வாழ்வில் தகவல் தொடர்பாடலின் முக்கியத்துவம்.
  - ▪ தொடர்பாடல்களில் கிறிஸ்தவ விழுமியங்கள்.
  - ▪ தகவல் தொடர்பாடல்கள் கிறிஸ்தவ விழுமியங்களை பாதிக்கும் விதங்கள்

- **கிறிஸ்தவக் கோட்பாடுகள்(*Christian Ethics*)**
  - **கிறிஸ்தவக் கோட்பாடுகளின் அடித்தளம்…**
    - அன்பும் கருணையும்…
      - அன்பே அடிப்படை
      - தகவல் தொடர்புகளில் அன்பும், இரக்கமும்,
    - உண்மையும், நேர்மையும்…
      - தொடர்பாடல்களில் நேர்மையும், வெளிப்படத்தன்மையும்.
      - பொய்யையும், வஞ்சகத்தையும் தவிர்த்தல்.
    - மரியாதையும், கண்ணியமும்…
      - வேறுபாடுகளைத் தவிர்த்து பிறரைக் கண்ணியத்துடன் நடத்துதல்.
      - ஒவ்வொருவரின் உள்ளார்ந்த உணர்வுகளை மதித்தல்.
    - மன்னிப்பும், ஒப்புரவாகுதலும்…
      - மன்னிப்பின் மூலம் முரண்பாடுகளைத் தீர்த்தல்.
      - தகவல் தொடர்புகளில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மன்னிப்பை பயன்படுத்தல்.

- **கிறிஸ்தவ சமூகத்திற்குள் தொடர்பாடல்…(*Communications in the Christian Society*)**
  - **ஆராதனையிலும், கூடுகையிலும்..**
    - கடவுளுடன் தொடர்பாடலை ஏற்படுத்தும் ஆராதனை.
    - பிறருடன் தொடர்பாடலை ஏற்படுத்த உதவும் ஆராதனை.
  - **வேதப்படிப்பு…**
    - கிறிஸ்தவ நம்பிக்கைகளைப் பகிர்ந்துகொள்ளும் தொடர்பாடல்கள்.
    - வேதாகம செய்திகளில் தொடர்பாடல்கள்.
  - **கூட்டுறவும், சார்ந்திருத்தலும்…**
    - தொடர்பாடல் மூலம் கிறிஸ்தவ சமூகத்திற்குள் வலுவான தொடர்வை ஏற்படுத்தல்.
    - தொடர்பாடல் மூலம் உணர்வுகளைப் பகிர்ந்து, ஆதரவளித்தல்.

- **உலகத்துடனான தொடர்பு(*Communications with the World*)**
  - **நற்செய்தி அறிவித்தல்(*Gospel*)…**
    - நற்செய்தியை பிறருக்கு அறிவிக்கும் தொடர்பாடல்
    - நற்செய்தி அறிவிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய கிறிஸ்தவ அறநெறிகள்.
  - **சமூக நீதியும், ஒழுக்கங்களும்(*Social Justice & Morals*)…**
    - சமூகப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், நீதியை நிலைநாட்டவும் தொடர்பாடலைப் பயன்படுத்தல்.
    - ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்தல்.

- **பிற மதங்களுக்கிடையேயான தொடர்பாடல்கள்(*Communications between Other Religions*)**
    - பிற மதத்தினருடன் கண்ணியமான முறையில் தொடர்புறுதல்.
    - பொதுவான தளத்தைக் கண்டறிந்து, புரிந்துணர்வை ஏற்படுத்துதல்.

- **கிறிஸ்தவ தொடர்பாடல்களிலுள்ள சவால்கள்(*Challenges in Christian Communications* )…**
    - தவறான தொடர் பாடல்களும், முரண்பாடுகளும்…
        - கிறிஸ்தவ சமூகத்திற்குள் உள்ள முரண்பாடுகள்
        - தவறான புரிந்துணர்வுகளை நிறுத்தும் தொடர்பாடல்கள்.

- **தொழில் நுட்ப வளர்ச்சியும், சமூக வலைத்தளங்களும்…**
    - கிறிஸ்தவத்திற்கு தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தல்.
    - தொழில்நுட்ப வளர்ச்சியால் கிறிஸ்தவ தொடர்பாடலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்.
    - தொழில் நுட்ப வளர்சியால் எதிர்கொள்ளும் சவால்கள்.

- **கிறிஸ்தவ தொடர்பாடலில் கவனிக்க வேண்டியவைகள்(***Points to note in Christian Communications***)**
    - கிறிஸ்தவ தொடர்பாடலின் முக்கிய கொள்கைகள்.
    - கிறிஸ்தவ சூழலில் தொடர்பாடலை வலியுறுத்துதல்.
    - அன்றாட தொடர்பாடல்களில் கிறிஸ்தவ விழுமியங்களைக் கைக்கொள்ளுதல்.
    - இயேசுவின் தொடர்பாடல் பாணியைப் பிரதிபலித்தல்.

**பயன்படுத்தப்பட்ட நூல்கள்(*Reference*)…**


1. ஜேசன் ஜோர்ஜஸ், *3 பரிமாண சுவிசேஷம்*, தெற்காசிய இறையியல் மீளாய்வு, USA, Time Press. –
2. தரம் 13 – *கிறிஸ்தவ நாகரீகம்* - ஆசிரியர் வழிகாட்டி, மஹரகம, தேசிய கல்வி நிறுவனம், 2018.
3. மார்கிரட் கலைச் செல்வி லார்பியர், *தொடர்பு இறையியல் ஓர் அறிமுகம்*, மதுரை, தமிழ் இறையியல் நூலோர் குழு, 2003.
4. கொழும்பு உயர்மறை மாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை, *ஞான ஒளி*, புரட்டாதி 2010.
5. Jeffery S. Forrey, *Christian Communication*, The Journal of Biblical Counselling, 1998.
6. Michele Buonfiglio, *An Intellectual Approach to the Communication of the Biblical Message to Secular People*, USA, Andrews University Seventh-day Adventist Theological Seminary, 1995.
7. MASSEY, James Earl, *The Sermon in Perspective: A Study of Communication and Charisma*, Grand Rapids, Michigan Baker Book House 1976.
8. SOGAARD, Viggo, *Media in Church and Mission: Communicating the Gospel*, Pasadena, California William Carey Library, -.